DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 64/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | முத்துமாரி |
| Father / Husband Name | சின்னச்சாமி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை கீழவாணியங்குடியில் குடியிருந்து வருகின்றேன். நான் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து தற்சமயம் ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு ஒரு பெண் பிள்ளை மற்றும் ஒரு ஆண் பிள்ளை உள்ளது. கடந்த 29.09.2015 ம் தேதியன்று காலை 09.15 மணிக்கு கீழவாணியங்குடி பெட்ரோல் பல்க் , கிறிஸ்தவர் கல்லறைத்தோட்டம் ஓரத்தில் என் மகன் நடந்து சென்று கொண்டிருந்த போது Honda இருசக்கர வாகனத்தில் எதிரி இராஜாராம் என்பவர் ஓட்டிவந்து என் மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்து நடந்த அன்று

எதிரியை பார்த்தேன் ஆனால் அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை.

2) எனது மனைவியும், மைத்துனரும் சம்பவத்தை பார்த்துவிட்டு எனக்கு போனில் தகவல் சொன்னார்கள் என் மகனுக்கு மார்பில் அடிபட்டது, வலது கால் எலும்பு நொறுங்கிவிட்டதாகவும் மருத்துவர்கள் சொன்னார்கள். அந்த வழியாக வந்த வண்டியில் ஏற்றி எனது மனைவியும், மைத்துனரும் எனது மகனை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று என் மகனை பார்த்தேன்.

3) என் மகன் வாய்பேசமாட்டார். கடந்த 29.09.2015 ம் தேதியன்று சிவகங்கை நகர் போலிசார் வந்து விசாரித்த போது என் மகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் இந்த விபத்து சம்பந்தமாக உடனடியாக வழக்கு பதிவு தேவையில்லை என அப்போது நினைத்தேன். அதன் பிறகு என் மகன் 12.10.2015 ம் தேதியன்று பகல் 12.10 மணியளவில் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி என் மகன் இறந்துவிட்டார். அப்போது என் மகனுக்கு வயது 27. அதன் பிறகு வழக்கு சம்பவம் குறித்து சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன்.

4) என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள விவரங்களை நான் சொல்ல சொல்ல என் உறவினர் எழுதினார். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பிறகு பிரேத பரிசோதனைக்கு பின்னர் என் மகனின் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தனர். என் மகனின் இறப்பிற்கு காரணம் விபத்தில் அடிபட்டது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) விபத்து நடந்த சமயத்தில் நான் மதகுபட்டி மின்சார வாரியத்தில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். இந்த விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என்றால் 10.00 மணிக்கு சொன்னார்கள். நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஆமாம். என் வீடு சிவகங்கை - மானாமதுரை ரோட்டில் கீழவாணியங்குடியில் தென்வடல் ரோட்டில் கிழக்கு புறமாக உள்ளது என்றால் ஆமாம்.

2) என் மகன் பள்ளிக்கு எதுவும் போகவில்லை என்றால் சரிதான். வீட்டில் வைத்து தான் என் மகனை பராமரித்து வந்தேன் என்றால் ஆமாம் அருகில் உள்ள கடைகளுக்கு சென்று வருவார். என் மகன் நடப்பதற்கு சிரமப்படுவார் என்றாலும், சற்று மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றாலும் சரியல்ல. என் மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறார். என் மனைவி தான் என் மகனை பார்த்துக்கொள்வார் என்றால் ஆமாம்.

3) விபத்து நடந்த அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம் சாட்சி மீண்டும் மகன் இறந்த பிறகு தான் புகார் கொடுத்தேன் என்று கூறுகிறார். எனது மகன் தான் வாகனத்திற்கு குறுக்கே வந்துவிட்டார் என்றும் அதனால் எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்தி கொள்கிறேன் என்று சொல்லி காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தேன் என்றாலும், அதற்கு சாட்சியாக எனது மைத்துனர் செல்லப்பாண்டி கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. என் மகன் அடிபட்டு கிடந்த போது எதிரி தரப்பில் சிகிச்சைக்காக செலவுக்கு பணம் கொடுத்தார்கள்.

4) என் மகன் இறப்பிற்கு முன்பே தான் அந்த பணத்தை வாங்கினேனா என்றால் ஆமாம். நான் அந்த பணத்தை வாங்கிக்கொண்டு காவல் நிலையத்தில் என் மகன் மீது தவறு உள்ளது என்று எழுதிக்கொடுத்துவிட்டு தற்சமயம் என் மகன் இறந்த பிறகு வேண்டுமென்றே பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பணம் பெற்றுக்கொண்ட போது அதற்காக எழுதி நானும், எனது மைத்துனர் செல்லப்பாண்டியும் கையொப்பம் செய்தோமா என்றால் ஞாபகமில்லை.

5) சம்பவத்தன்று என் மனைவி என் மகளை ஒழுங்காக பார்த்துக்கொள்ளாத காரணத்தினால் தான் என் மகன் வீட்டில் இருந்து வெளியே வந்து எதிரியின் வாகனத்தின் குறுக்கே வந்து விபத்தில் சிக்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சிவகங்கை - மானாமதுரை ரோடு 100 அடி அகல ரோடு என்றால் தற்சமயம் தான் ரோட்டை அகலப்படுத்தியுள்ளனர் விபத்து நடந்த சமயத்தில் அந்த ரோடு 60 அடி அகல ரோடு .

6) என் மகன் இறந்த பின்னர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் என் அக்கா மகன் வேல்முருகன் எழுதினார் அவர் தற்சமயம் இறந்துவிட்டார். புகாரில் உள்ள சங்கதிகள் யாவும் வழக்கிற்காக போலிசார்

**சொல்லிக்கொடுத்ததற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.**

7) **சம்பவத்திற்கு முன்பு என் மகனை ஏற்கனவே எந்த சிகிச்சை எதுவும் எடுத்துக்கொண்டோமா என்றால் வாய்பேசாமல் நடக்க இயலாமல் இருப்பதால் மதுரை, சிவகங்கையில் சிகிச்சை எடுத்துள்ளோம். சாட்சி மீண்டும் மாற்றி வாய் பேசாமல் இருப்பதற்கு மட்டுமே சிகிச்சை எடுத்தோம் அவர் நன்றாக நடப்பார் என்று கூறுகிறார்.**

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 22.06.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**